செய்தி வெளியீடு எண்:41 நாள்: 16.09.2021.

**தேனி மாவட்டம்**
**கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.64.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்:-.**

**********

வேளாண்மை மற்றும் உழவர்த்துறையின் சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேப்பம்பட்டி கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட 2 தொகுப்புகளையும், புலிக்குத்தி கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட 1 தொகுப்பினையும் இன்று (16.09.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு, தெரிவித்ததாவது,

தமிழகத்தில் ஆண்டொன்றிற்கு இரண்டாயித்து ஐநூறு கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு வேளாண்மை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் வணிகம், ஊரக வளர்ச்சித் துறை, வருவாய் துறை ஆகிய 13 துறைகளின் நலத் திட்டங்களை செயல்படுத்தி ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சியை ஏற்படுத்துவதே கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் வட்டாரத்திற்கு 5 கிராம ஊராட்சிகள் வீதம் 40 பஞ்சாயத்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் தற்போது தரிசு நில தொகுப்புகளை கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது. ஒரு தரிசு நில தொகுப்பு 10 முதல் 35 ஏக்கர் வரை தரிசும், 8 பயனாளிகளை கொண்டதாகவும் இருக்கும். தேனி மாவட்டத்தில் தற்பொழுது வரை 28 தொகுப்புகள் 570 ஏக்கர் பரப்பளவில் இதுவரை கண்டறியப்பட்டுள்ளது. இத்தொகுப்புகளில் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக புதர்களை நீக்கி, நீர் பாசன வசதி ஏற்படுத்தி சாகுபடிக்கு கொண்டு வருவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலமாக தொலைநோக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமான நிகர சாகுபடி பரப்பு மேலும் அதிகரிக்கப்படும் என தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் அலுவலர்கள் அடிப்படை புள்ளி விவரங்கள் சேகரிப்பு பணி மற்றும் தரிசு நிலங்களை கண்டறியும் பணியினை கூடிய விரைவில் நிறைவு செய்து பல்வேறு துறையினர் அந்த கிராமத்தில் செயல்படுத்தப்பட உள்ள திட்ட இனங்கள் குறித்த விரிவான திட்ட கருத்துருவினை தயார் செய்து அளித்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, கம்பம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நாராயணத்தேவன்பட்டி ஊராட்சியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் கருப்பசாமி கோவில் சாலை பலப்படுத்தும் பணி, மகாத்மாக காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் முதல் ராஜேந்திரன் வீடு வரை வடிகால் அமைக்கும் பணி,

மாவட்ட ஊராட்சி பொது நிதியின் கீழ் ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் பரமன் கறிக்கடை முதல் ஓடை வரை வடிகால் அமைக்கும் பணி, மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பாண்டியராஜன் ஓடை முதல் தர்மராஜ் தோட்டம் வரை வரத்து வாய்க்காலில் நீர்ப்பிடிப்பு குட்டை அமைக்கும் பணி, சுருளிப்பட்டி ஊராட்சியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.29.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் காலனியில் பேவர் பிளாக் கற்கள் பதிக்கும் பணி, மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ.1.35 இலட்சம் மதிப்பீட்டில் மாட்டுக்கொட்டகை அமைக்கும் பணி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஆர்.தண்டபானி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஷ்ணுராம் மேத்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயகாந்தன், கோதண்டபானி உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**